**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,

*******

ஆணை எண் 25/ந/2021
நாள் 03.10.2022

திரு. K. சுடர்மணி,
காஞ்சிபுரம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
காஞ்சிபுரம் பெருநகராட்சி – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், பிள்ளையார் பாளையம், C.S.M. தெரு, 26A, என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. சுடர்மணி என்பவரின் 26.03.2021 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் 29.03.2021 அன்று பெறப்பட்டு 25/ந/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், பிள்ளையார் பாளையம், C.S.M. தெரு, 26A, என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. சுடர்மணி என்பவர் தன்னுடைய மனுவில் கீழ்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான் காஞ்சிபுரம் பெருநகராட்சியில் கடந்த 2004-ம் ஆண்டுமுதல் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பணி செய்து வருகிறேன். காஞ்சிபுரம் பெருநகராட்சியில் இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்து 11.09.2018 மற்றும் 03.01.2019 ஆகிய தேதிகளில் மற்றும் வேறு சில தேதிகளில் இதனுடன் சேர்த்து மேலும் சில பணிகளுக்கும் அதற்கான பணி ஆணைகளையும் அப்போதைய ஆணையர் மூலமாக பெற்றிருந்தேன். பின்னர் இப்பணிகளை துவக்குவதற்கு அனுமதி கோரி அப்போதைய ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரை சந்தித்த போது இப்பணிகளை இப்போது துவங்க வேண்டாம் பணி இடம் பணி துவக்குவதற்கு ஏற்றதாக இல்லை என்று, வாய்மொழியாக பணி துவங்க வேண்டாம்

என தெரிவித்து விட்டார்கள். அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு அத்திவரதர் வைபவம் அதனை தொடர்ந்து மழை காலம் ஆகியவற்றால் பணி துவங்க வேண்டாம் என அப்போதைய ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர்கள் வாய்மொழியாக தெரிவித்து விட்டார்கள். இந்நிலையில் கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் காஞ்சிபுரம் பெருநகராட்சி ஆணையராக பொறுப்பேற்ற திருமதி.ரா.மகேஸ்வரி அவர்களை கடந்த 2020 பிப்ரவரி மாதம் அப்போதைய நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் பணி துவங்க அனுமதி கேட்டு சந்தித்தேன். அப்போது அவர் இப்பணிகளை துவங்க வேண்டுமானால் எனக்கு 5% தொகையை கமிசனாக தர வேண்டும். அப்போதுதான் பணி துவங்க அனுமதி தருவேன் என என்னிடத்தில் கூறினார்கள். நான் அத்தொகையை தர மறுத்து அங்கிருந்து வெளியேறிவிட்டேன். அதன் பிறகு பணி உத்தரவு வழங்கியுள்ள பணிகளுக்கான கோப்புகளை உதவி பொறியாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு ஆணையர் அறையிலேயே வைத்து கொண்டார். அதன் பின்னர் கொரோன நோய் தொற்று மற்றும் ஊரடங்கின் காரணமாக அப்பணிகளை துவங்க முடியவில்லை. பின்னர் மீண்டும் அவரை சந்தித்து பணிகளை துவங்க அனுமதி கோரியபோது 5 % தொகையை கமிசனாக தந்தால் மட்டுமே பணி துவங்க அனுமதிப்பேன், நீ யாரிடம் சென்று புகார் தெரிவித்தாலும் பொது நிதியில் பணம் இல்லை என்று கூறி விடுவேன். ஆனால், இவ்வாறு என்னிடத்தில் தெரிவித்துவிட்டு பொது நிதியில் ரகசியமாக நல்ல நிலையில் இருந்த சிமெண்ட் சாலை மீதே லட்சக்கணக்கில் தார் சாலை அமைத்து கமிசன் பெற்று உள்ளார்கள் மேலும் சில ஒப்பந்த புள்ளிகளை கோரி அவற்றிற்கு 10% கமிசன் பெற்று பணி ஆணைகளை வழங்கி பணி துவங்கி நடைபெற்று வருகிறது. சில பணிகளுக்கு பணி செய்து முடித்து பட்டியல் தொகையும் வழங்கப்பட்டு விட்டது. இந்த விபரங்கள் எனக்கு தெரிந்து நேரில் சந்தித்து கேட்ட போது நீங்கள் இந்த விபரங்களை சிபிஐ இடம் வேண்டுமானாலும் புகார் தெரிவித்து கொள்ளுங்கள் என கூறி இதுவரை பணி துவங்க விடவில்லை. இது மட்டும் இல்லாமல் நகராட்சியில் நான் பொது நிதியின் கீழ் செய்து முடித்து எனக்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகை ரூபாய் இருபது இலட்சத்தையும் 5% கமிசன் தொகை தந்தால் மட்டுமே தருவேன் என கூறி அத்தொகையை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளார்கள். மேலும் பணி செய்து முடித்து அதில் பிடித்தம் செய்த 5% தொகை மற்றும் முன் வைப்பு தொகை, கூடுதல் முன் வைப்பு தொகை ரூபாய் ஐந்து லட்சம் ஆகியவற்றையும் 5% கமிசன் தொகை கேட்டு நிறுத்தி வைத்துள்ளார்கள். அதையும் தாண்டி எனக்கு தர வேண்டிய காசோலைகள் தயாரானால் அவற்றிற்கு முன் தேதியிட்டு கையொப்பம் இடுவது, வவுச்சரில் ஒரு தேதி போடுவது, காசோலையில் ஒரு தேதி போடுவது பின்னர் அவற்றை திருத்துவது என தொடர்ந்து என்னை பழிவாங்கும் நோக்கோடு செயல்பட்டு வருகிறார்கள். அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளேன். இதற்கு எல்லாம் உச்சகட்டமாக எனக்கு நகராட்சி மூலம் வரவேண்டிய பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.64,220/- மற்றும் ரூ.77,750/- முறையே 06.01.2021 மற்றும் 08.01.2021 ஆகிய தேதிகளில் தயார் ஆகி இரண்டு நாள் விடுமுறைக்கு பின் தகவல் தெரிந்து 11.01.2021 தேதியில் பெற சென்றபோது வவுச்சரில் ஸ்டாம்ப் ஒட்டிய நிலையில், 5% கமிசன் தொகை தந்த பிறகே காசோலையை என்னிடத்தில் வழங்க வேண்டும் என ஆணையர் தெரிவித்துள்ளதாக கூறி தர மறுத்து விட்டார்கள். பின்னர் என்னுடைய நீண்ட போராட்டத்திற்கு பின்னரே எனக்கு அந்த காசோலையை 04.02.2021 வவுச்சரில் புதிய ஸ்டாம்ப் ஒட்டி வழங்கினார்கள். அதற்கான ஆதாரத்தையும் இப்புகார் மனுவுடன் இணைத்துள்ளேன். இதுபோல் மேலும் சில காசோலைகள் மேற்கூறியவாரே வழங்கப்பட்டுள்ளன. தற்போது காஞ்சிபுரம்

பெருநகராட்சிக்கு சொந்தமான யாத்திரிகர்கள் தங்கும் விடுதி மற்றும் உணவகத்தில் வாடகை வசூலிக்கும் உரிமம் என்ற பணிக்கு 03.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரினார்கள். நான் அதில் ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டு ஒப்பந்த புள்ளி மூலம் ரூ.7,20,999/- உச்ச தொகை கோரி ஏலம் பெற்றிருந்தேன். ஏலம் முடிந்து என்னிடத்தில் அதற்கான கையொப்பம் பெற்ற பிறகு எனக்கு அந்த உரிமத்தை வழங்குவதற்கு ரூ.1,00,000/- தனியாக பணமாக தர வேண்டும் என கேட்டார்கள். அதனை நான் தர மறுத்த காரணத்தினால் ஏற்கனவே என்னோடு ஏலத்தில் கலந்து கொண்டு தற்போது குத்தகைதாரராக உள்ள நபரும் மற்றும் அவரது நண்பர் லோகேஷ் என்பவரை மீண்டும் சட்ட விரோதமாக பணம் செலுத்த வைத்து, சட்ட விரோதமாக அவருக்கே அந்த பணியை வழங்கி உள்ளார்கள் இதற்கான ஆதாரத்தையும் சமர்ப்பித்துள்ளேன். மேலும் கொரோனா காலத்தில் மாஸ்க், ஹான்ட் சானிடைசர், லெமன் கிராஸ் ஆயில் இவைகளுடன் துப்புரவு பணியாளர்களை அழைத்து செல்லுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் வேன் வாடகைக்கு எடுத்த வகையில் மிக பெரிய ஊழல் நடந்துள்ளது.

பொது நிதியில் பணம் இல்லை என என் போன்ற பல ஒப்பந்ததாரர்களுக்கு தர வேண்டிய பட்டியல் தொகை கோடி கணக்கில் நிலுவையில் உள்ள நிலையில் மேலும் 24.02.2021 தேதியில் பொது நிதியின் கீழ் ரூ.251.10 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கமிசன் தொகை பெறவேண்டும் என்பதற்காகவே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதற்கு எல்லாம் காரணம் நான் அவர் கேட்கும் கமிசன் தொகையை தர மறுப்பதும் நகராட்சியில் நடைபெறும் பணிகள் குறித்த தகவல்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோருவதும் ஆகும் இதனால் என் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு என்னை பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். எனவே காஞ்சிபுரம் பெருநகராட்சி ஆணையர் திருமதி.ரா.மகேஸ்வரி மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். குற்றச்சாட்டுக்கான ஒரு சில ஆவணங்களை சமர்ப்பித்துள்ளேன்.

காஞ்சிபுரம் காந்தி சாலையில் இயங்கும் பிரகாஷ் பட்டு சேலை விற்பனை நிலையம் விதி முறைகளை மீறிய கட்டிடத்திற்கு கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக ஒரு பெரிய தொகை மற்றும் பட்டு சேலைகளையும் கையூட்டாக பெற்று கொண்டு அதை நகராட்சிக்கு சொந்தமான வாகனத்திலேயே எடுத்து சென்றார்கள். அதற்கான ஆவணத்தையும் சமர்ப்பித்துள்ளன். மேலும் காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகள் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. காஞ்சிபுரம் கோவில் நகரம் என்பதால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயரம் கட்டிடம் கட்டக்கூடாது என விதிமுறைகள் உள்ள நிலையில் கோவில் இடங்கள் நிறைய உள்ள நிலையிலும் கீழ்காணும் விலாசங்களில் உள்ள ஒரு சில இடங்களுக்கு கட்டிடம் கட்ட விதிமுறைகளை மீறி அனுமதி அளித்து உள்ளார்கள் என்ற தெரிவித்து எதிர் மனுதாரரான காஞ்சிபுரம் முன்னாள் ஆணையர் திருமதி.R.மகேஷ்வரி அவர்கள் மீது உரிய நடவடிக்கைக்கு உத்தரவு இடும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

1) கதவு எண்.54, காமாட்சி அம்மன் சன்னதி தெரு (R.K.கங்காதரன்) தொல்லியல் துறை தடை இல்லா சான்று பெறாமல் கட்டிட அனுமதி வழங்கிய இடம்.

2) கதவு எண்.2ஏ, காவலன் தெரு அடித்தளத்துடன் கூடிய கட்டிட அனுமதி அளித்தது.

3) செங்கழு நிரோடை வீதி பகவன் மூங்கில் டிப்போ அருகில் விதிமுறைகளை மீறி வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வழங்கியது.

4) காஞ்சிபுரம் காந்தி ரோடு பிரகாஷ் சில்க்ஸ்ல் 4 மாடி அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடம்.

3. இம்முறைமன்றத்தின் 07.04.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு. K. சுடர்மணி மற்றும் காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் 29.04.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. ஆனால் கொரோனா தொற்று காரணத்தால் 29.04.2021 அன்று நிர்ணயிக்கப்பட்ட விசாரணை, தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டு அத்தகவல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மறு விசாரணை தேதி 07.09.2021 அன்று நிர்ணயிக்கப்பட்டு மனுதாரர் திரு. K. சுடர்மணி மற்றும் காஞ்சிபுரம் நகராட்சியின் அப்போதைய ஆணையர் திருமதி.R.மகேஷ்வரி ஆகியோர் 07.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற அழைப்பாணை நாள் 13.08.2021 மூலம் ஆணையிடப்பட்டது.

4. மனுதாரர் திரு. K. சுடர்மணி 07.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவ அலுவலகத்திற்கு வருகை புரிந்து கூடுதல் ஆவணங்களை சமர்ப்பிக்க தமக்கு கால அவகாசம் கோரி 07.09.2021 நாளிட்ட கடிதத்தை சமர்ப்பித்து சென்றுள்ளார். 07.09.2021 அன்று நடக்கவிருந்த விசாரணைக்கு நகராட்சி ஆணையர் வர இயலாத காரணத்தை தெரிவித்து கடிதம் அனுப்பியதால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

5. இந்நிலையில், இம்முறைமன்றத்தின் 29.09.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திரு. K. சுடர்மணி மற்றும் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையர் திருமதி.R.மகேஷ்வரி ஆகியோர் 11.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. 11.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் திரு. K. சுடர்மணி அவர்கள் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

“காஞ்சிபுரம் பெருநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பணிகளை செய்து வருகிறேன். மேற்கண்ட பணிகளை முடித்த உடன் அதற்கான காசோலையை நகராட்சியிலிருந்து பெறும்போது அதற்கு நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் கமிஷன் கேட்கின்றனர். உதாரணமாக எனக்கு சேர வேண்டிய ரூ 64,220/- மற்றும் ரூ 77,750/- ஆகிய தொகை முறையே 06.01.2021 மற்றும் 08.01.2021 ஆகிய நாட்களில் தயார் செய்து அதனை நீண்ட போராட்டத்திற்குப் பின் 04.02.2021–ல் பெற்றுக் கொண்டேன். காலதாமதத்திற்கு காரணம் நான் கமிஷன் தராததுதான். மேற்கண்ட நகராட்சியில் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சில பகுதிகளில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற முறைகேடுகள் காஞ்சிபுரம் நகராட்சியில் நடைபெற்று வருகிறது. இதற்கு காரணமான அப்போதைய நகராட்சி ஆணையர் திருமதி.ரா.மகேஷ்வரி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 26.03.2021 நாளிட்ட மனுவினையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6. இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2021 அன்று விசாரணைக்கு ஆஜரான எதிர் மனுதாரரான கடலூர் நகராட்சி ஆணையர் திருமதி.R.மகேஷ்வரி அவர்கள் கீழ்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

“காஞ்சிபுரம் பெருநகராட்சியைச் சேர்ந்த திரு.சுடர்மணி என்பவர் இம்முறைமன்றத்தில் அளித்துள்ள புகார் மனு காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே அளிக்கப்பட்டதாகும். காஞ்சிபுரம் பெருநகராட்சியில் ஒப்பந்ததாரராக உள்ள திரு.சுடர்மணி என்பவர் அவருக்கு அளிக்கப்பட்ட பணிகளை தரமற்றதாகவும், காலதாமதமாகவும் செய்துள்ளார். ஒரு சில பணிகளை பணி ஆணை வழங்கப்பட்டும் அதனை மனுதாரர் செய்யவில்லை. இதுபோன்ற செயல்களை நான் ஆணையராக பணியேற்றவுடன் என்னால் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டதால் இதுபோன்ற புகார்களை அனுப்பி வருகிறார்.

மனுதாரர் பணிகளை முடித்தவுடன் அதற்கான காசோலை நகராட்சியால் மனுதாரருக்கு வழங்க சரியான நேரத்தில் தயார் செய்யப்பட்டது. ஆனால், அதனை மனுதாரர் அவராகவே கால தாமதம் செய்து பெற்றுள்ளார்.

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் தொல்லியல் துறை வகுத்துள்ள 300 மீட்டர் இடைவெளி தள்ளியே கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 300 மீட்டருக்குள்ளாக உள்ள இடத்திற்கு தொல்லியல் துறை NOC இருந்தால் மட்டுமே அனுமதி வழங்க முடியும்.

இரண்டு பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட டெபாசிட் தொகை, பணிகள் முடிந்தவுடனும், தணிக்கை முடிந்தவுடனும் உரிய விண்ணப்பத்தின் அடிப்படையில் இரண்டு காசோலைகளாக வழங்கப்பட்டன. அவை இரண்டும், இரண்டு பணிகளுக்கானதாகும்.

வெறொரு விசாரணைக்கு நகராட்சி வாகனத்தில் செல்லும்போது விசாரணை தொடர்பான கோப்புகளைத்தான் தனியார் ஜவுளி பையில் எடுத்துச் சென்றேன். அதனை திரித்து மனுதாரர் இம்முறை மன்றத்தில் புகாராக அளித்துள்ளார்.

மேலும் எனது 08.10.2021 நாளிட்ட நீண்ட விளக்கத்தினையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான தணிக்கைத் தடை மற்றும் சில ஆவணங்களின் நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

7. காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் தன்னுடைய 22.07.2021 நாளிட்ட அறிக்கையில் கீழ்காணுமாறு தெரிவித்துள்ளார்:-

“திரு.K.சுடர்மணி ஒப்பந்ததாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள 11.09.2018-க்கு பிறகு பல்வேறு தேதிகளில் பல்வேறுபட்ட பணிகளுக்கு 28 பணி உத்தரவுகள் பெற்றுள்ளார். இப்பணிகளை 25.04.2019 முதல் 07.05.2021 வரை முடிக்கப்பட்டுள்ள மொத்தம் 23 பணிகளுக்குண்டான பட்டியல் தொகை ரூ.199.56 இலட்சங்களை பெற்றுள்ளார்.

இந்நிலையில் செய்து முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ள 5 பணிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.54.70 இலட்சங்கள் ஆகும். இந்த ஐந்து பணிகளுக்கும் பணி உத்தரவு (Work Order) (11.09.2018 (1 No.), 03.01.2019 (2 Nos.) மற்றும் 04.02.2019

(2 Nos) வழங்கி நான்கு வருடங்கள் ஆகியும் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பணி உத்தரவு நிபந்தனைகளின்படி அதிகபட்சமாக இப்பணிகளுக்கான பணி உத்தரவு பெற்ற நாட்களில் இருந்து இரு மாதங்களுக்குள் பணியினை முடித்திருக்க வேண்டும்.

இப்பணிகள் உரிய நேரத்தில் முடிக்கப்படாததால், பொது மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளின் பயன்பாடு பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் சென்று அடையவில்லை. இதனால் பொதுமக்கள் மத்தியில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. இப்பணிகளை உரிய நேரத்தில் முடிக்காமல் காலம் தாழ்த்தி உள்ளதால் இப்பணிகளை ரத்து செய்தல், மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் இப்பணிக்கான பொருள் சந்தை விலை மற்றும் மறு மதிப்பீடு போன்ற சூழ்நிலைகளில் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் இப்புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு 11.09.2018 தேதிகளுக்கு பிறகு பல பணிகள் எடுத்து செய்து முடித்து பட்டியல் தொகை பெற்றுள்ள நிலையில் மேற்குறிப்பிட்ட ஐந்து பணிகள் காலம் கடந்தும் செய்து முடிக்கப்படாததுடன், நிலுவைப் பணிகளை துவங்க அனுமதி மறுத்ததாகவும் 5% கமிசன் தொகை கொடுத்தால்தான் பணி செய்ய அனுமதிப்பேன் என்றும் தெரிவித்துள்ள புகார் முற்றிலும் தவறானதாகும்.

மேலும் புகார் மனுவில் 26.03.2021 அன்று திரு.K.சுடர்மணி, ஒப்பந்ததாரர் செய்து முடித்துள்ள பணிகளுக்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகை ரூ.20.00 இலட்சம் வழங்காமல் உள்ளது என்று தெரிவித்திருப்பது முற்றிலும் தவறானதாகும்.

புகார் மனு அளித்த பொழுது பட்டியலில் வ.எண்.25-ல் உள்ள பணிக்கான மதிப்பீடு ரூ.4.80 இலட்சங்கள் மட்டுமே நகராட்சியின் நிதி நிலை சரியில்லாத காரணத்தினால் வழங்க இயலாத நிலையில் இருந்தது. பின்னர் இந்நிலுவைத் தொகையும் 07.05.2021 அன்று வழங்கப்பட்டு விட்டது. இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட வேண்டிய பணிகளுக்கான பட்டியல் தொகை நிலுவை ஏதும் இல்லை.

மேலும் முடிக்கப்படாமல் உள்ள 5 நிலுவைப் பணிகளின் மதிப்பு ரூ.54.70 இலட்சங்கள் ஆகும் இப்பணிகளை விரைந்து முடிக்குமாறும், தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என திரு.K.சுடர்மணி ஒப்பந்ததாரருக்கு நேரடியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு நேரடியாக அறிவுறுத்தியதின் பேரில் நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இப்புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா நோய் தொற்று முதல் மற்றும் இரண்டாம் அலை மற்றும் அரசின் பொது முடக்க தளர்வுகளின் காரணமாக நகராட்சிக்கு வரவேண்டிய வரி வருவாய் இனங்கள் வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் நகராட்சியின் நிதி ஆதாரமின்மை காரணமாக வரி வசூல் வருவாய்க்கு தக்கவாறு படிப்படியாக பட்டியல் தொகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு அத்தியாவசிய அடிப்படை வசதிகள் தேவைக்கு தக்கவாறு சாலை, தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர், பாதாளசாக்கடை வசதிகள் ஏற்படுத்தும் பணிகளின் முக்கியத்துவத்தினை கருத்தில்

கொண்டு, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்புகார் மனுவில் கமிஷன் தொகைக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்ற புகார் உண்மைக்கு புறம்பானது என்று தெரிவித்துள்ளார்.

"மேலும் மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகாரில் தெரிவித்துள்ள விவரப்படி அன்னாருக்கு வழுங்கவேண்டிய தொகை ஆணையரின் உத்தரவுப்படி பில் பட்டியல் அலுவலக நடைமுறைப்படி Online ல் தயாரித்து காசோலை வழங்கப்பட்டுள்ளது. Online ல் பில் பட்டியல் எந்த தேதியில் தயாரிக்கப்படுகிறதோ அன்றைய தேதியில் தான் காசோலையும் தயாரித்து வழங்கப்படுகிறது. இதில் தவறு ஏதும் நடைபெறவில்லை. மேலும் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய காசோலை ரூ.64,220/- மற்றும் ரூ.77,750/- முறையே 06.01.2021, 08.01.2021 ஆகிய தேதிகளில் தயாரிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அக்காசோலையை அன்னார் காலம் தாழ்ந்து வந்து பெற்றுக்கொண்டார். இதில் முன் தேதியிட்டு ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் அக்காசோலைக்கான கமிஷன் 5% கோரியது தவறான புகாராகும்".

"காஞ்சிபுரம் நகராட்சிக்கு சொந்தமான யாத்திரிகர்கள் நிவாஸ் உணவகம் மற்றும் தங்கும் விடுதிக்கு 2021-22 ஆம் ஆண்டுக்கு குத்தகை விடப்பட்டது தொடர்பாக 21.07.2021 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு ஆணையர் விளக்கம் அளித்துள்ளார்.

2021–22 ஆம் ஆண்டுக்கு யாத்திரிகர்கள் நிவாஸ் உணவகம் மற்றும் தங்கும் விடுதிக்கு ஏலம் விடப்பட்டதில் திரு.T.கிருபாகரன் மற்றும் திரு.S.லோகேஷ் ஆகியோர்கள் கலந்து கொண்டு ஏலம் கோரினார்கள். இதில் ஏலத்தொகையினை திரு.S.லோகேஷ் என்பவர் ரூ.7,20,000/- த்திற்கு ஏலம் கோரினார்.

அதன்பிறகு இதே இனத்திற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி திறந்து பார்த்த பொழுது திரு.K.சுடர்மணி என்பவர் ரூ.7,20,999/-க்கு குத்தகை எடுக்க ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இதில் அதிகபட்ச தொகையாக திரு.K.சுடர்மணி அவர்களுடைய தொகை ஆகும்.

ஆனால் அன்றைய தினமே ஏலத்தில் கலந்து கொண்ட திரு.S.லோகேஷ் என்பவர் இந்த இனத்தை மறு ஏலம் கொண்டு வர இந்நகர்மன்றம் 2021-22 முதல் 2023-24 வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை வெளியிடப்பட்ட பக்கம் எண்.5–ல் பொது நிபந்தனையின் வரிசை எண்.17–ல் உள்ள பத்தியில் உரிமை இனங்களுக்கான ஏலம் முடிந்தும் மறு ஏலம் கொண்டு வர விரும்புகிறவர்கள் ஏலம் விடப்பட்ட 48 மணி நேரத்திற்குள் உறுதி செய்யப்பட்ட ஏலத் தொகையில் 100% நகராட்சி கருவூலகத்தில் ரொக்கமாக முன்பணம் செலுத்தி மீள மறு ஏலம் கோர விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் திரு.S.லோகேஷ் (ஏலத்தில் கலந்து கொண்டவர்) ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச தொகையான ரூ.7,20,999/-யை 100 சதவிகிதத்துடன் கூடுதலாக 15 சதவிகிதம் சேர்த்து ரூ.8,29,149/-யும் ஒரே தவணையாக 04.02.2021 அன்று நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி மறு ஏலம் கோர

விண்ணப்பித்துள்ளார். இதனை தொடர்ந்து மேற்படி இனத்திற்கு 11.02.2021 அன்று மறு ஏலம் கோரப்பட்டது. மேற்படி தினத்தன்று ஏலத்தில் கலந்து கொள்ள நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு ஒட்டியும், அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் தபால் மூலம் சார்வு செய்தும் மேலும் 03.02.2021–ல் நடத்திய ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்களுக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கும் ஏலஅறிக்கை அனுப்பப்பட்டு மேற்படி ஏலத்தில் திரு.S.லோகேஷ் மற்றும் திரு.T.கிருபாகரன் ஆகியோர் மட்டும் கலந்து கொண்டார்கள். திரு.K.சுடர்மணி என்பவருக்கு ஏல அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. எனவே இவ்வினத்திற்கு திரு.S.லோகேஷ் என்பவரால் ஏலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச தொகை ரூ.8,45,000/-த்தை உறுதி செய்து, நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு குத்தகை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்களின் அடிப்படையில் நகராட்சி குத்தகை இனமான எண்.21 ஆஸ்பிட்டல் ரோட்டிலுள்ள யாத்திரிகர்கள் கட்டிடத்தில் உணவகம் மற்றும் தங்கும் விடுதி அறைகளில் வாடகை வசூலிக்கும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை. திரு.K.சுடர்மணி கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ 7,20,999/– விட உயர்ந்தபட்ச ஏலத்தொகையான ரூ.8,45,000/– கோரிய திரு.லோகேஷ் என்பவருக்கு குத்தகை விடப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு வருவாயே தவிர எந்தவித இழப்பும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இப்புகார் தொடர்பாக மனுதாரால் புகாராக குறிப்பிடப்பட்டுள்ள காஞ்சிபுரம் நகராட்சியில் தொல்லியல் துறை சான்று பெறப்படாமலும், விதிமுறைகளை மீறியும் கட்டியுள்ள 4 கட்டடங்களை முறையாக ஆய்வு செய்து, விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிபெற்று கட்டப்பட்டுள்ளதா என்பதையும், தொல்லியல் துறை வகுத்துள்ள 300 மீட்டர் இடைவெளி விட்டு கட்டப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்து அறிக்கையினை அனுப்புமாறு காஞ்சிபுரம் நகராட்சி ஆணையாளர் இம்முறைமன்ற நடுவத்தின் 27.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தமது 30.08.2022 நாளிட்ட பதிலை இம்முறைமன்றத்தில் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்துள்ளார். அதில்

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | புகார் | நகரமைப்பு ஆய்வரின் குறிப்பு |
|---|---|---|---|
| 1 | R.K.கெங்காதரன்,<br>57, காமாட்சியம்மன் சன்னதி தெரு, பூக்கடை சத்திரம், காஞ்சிபுரம்<br>க.வி.எண்.008/CP/19–20/0003446<br>க.உ.எண்.008/BL/2020/00121.<br>நாள். 28.05.2020.<br>B.A.No.008/BPA/2020/00082. | தொல்லியல் துறை வரையரைக்குட்பட்ட பகுதியில் அனுமதி வழங்கப்பட்டதாக புகார். | R.K.கெங்காதரன், 57, காமாட்சியம்மன் சன்னதி தெரு, பெரிய காஞ்சிபுரம் ந.அ.எண்.876/1B,1C & 2, வார்டு–IV, பிளாக் 13–ல் smart DCR மூலம் மனுதாரர் இணையதளம் மூலமாக விண்ணப்பித்த வரைபடம் (ம) ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தொல்லியல் துறையின் அளவீடுகளை கடந்த இடமாக மேற்படி இடம் அமைகிறது என்ற தகுதி |

| | | | |
|---|---|---|---|
| | | | அடிப்படையில் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| 2 | S. ராஜேஸ்வரி,<br>2A, காவலன் தெரு, காஞ்சிபுரம்<br>க.வி.எண்.008/CP/19–20/0002857<br>க.உ.எண்.008/BC/2020/00079.<br>நாள். 16.03.2020.<br>B.A.No.008/BPA/2020/00040. | காவலன் தெருவில் விதி மீறி கட்டிட அனுமதி வழங்கியது | மனுதாரர் Online–ல் விண்ணப்பித்துள்ளார். மேற்படி இடத்தில் வணிகக் கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி கோரியிருந்ததால். மேற்படி Smart DCR–ன்படி முறையாக விண்ணப்பிக்கப்பட்டு, அது பரிசீலனை செய்து அனுமதி வழங்கப்பட்டது. இதில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை. |
| 3 | P. ஆறுமுகம், A. ஆனந்தி,<br>131, 132B, செங்கழு நீரோடை வீதி, காஞ்சிபுரம்<br>க.வி.எண்.008/CP/20–21/0001298<br>க.உ.எண்.008/BL/2020/000305.<br>நாள். 15.10.2020.<br>B.A.No.008/BPA/2020/00505. | செங்கழு நீரோடை வீதி பகவான் மூங்கில் டிப்போ அருகில் விதிகளை மீறி கட்டிட அனுமதி வழங்கியது. | புகாரில் தெரிவிக்கப்பட்ட இடம் கதவு எண். 131, 132B, செங்கழு நீரோடை வீதியில் P. ஆறுமுகம், A. ஆனந்தி, என்பவர்கள் இந்நகராட்சிக்கு விண்ணப்பித்ததில் அவர்களது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு முறையாக குடியிருப்பு அல்லாத வணிக கட்டிடம் அனுமதி வழங்கப்பட்டது. வாகன நிறுத்தம் தரைத்தளம் 70.07 ச.மீ., முதல் தளம் 70.07 ச.மீ., இரண்டாம் தளம் 45.37ச.மீ. ஆக கூடுதல் 185.51 ச.மீ. நகராட்சிக்கு வணிக கட்டிடம் கட்டிக்கொள்ள 200 ச.மீ. வரை வழங்க வழிவகை உள்ளது. மனுதாரருக்கு 185.51 ச.மீ பரப்பளவுக்கு அனுமதி வழங்கியது உரிய வரம்பிற்குள் வருகிறது. எனவே இது விதி மீறல் என கொள்ளமுடியாது. |
| 4 | பிரகாஷ் .சா த/பெ துளசி. சா<br>92, காந்தி ரோடு, காஞ்சிபுரம். | தடையில்லா சான்று வழங்கப்பட்டதாக புகார். | காஞ்சிபுரம் பெருநகராட்சி, 92, காந்தி சாலையில் அமைந்துள்ள அனுமதியற்ற கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 216(1)(2)–ன் பிரிவின் கீழ் அறிவிப்பு 29.02.2021–ல் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் 29.08.2022–ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

8. மனுதாராரின் மனு விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் மனுதாரர் அளித்த ஆதார ஆவணங்கள், காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் அவர் அளித்த ஆதார ஆவணங்கள் மற்றும் தற்போதைய காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலினை செய்யப்பட்டன.

9. காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கையை பரிசீலனை செய்ததில் மனுதாரர் திரு. K. சுடர்மணி அவர்களுக்கு 28 பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு அவைகளில் முடிக்கப்பட்ட 23 பணிகளுக்குண்டான பட்டியல் தொகை ரூ.199.56 இலட்சம் (ஒரு கோடியே தொண்ணூற்றி ஒன்பது இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரம் ரூபாய் மட்டும்) வழங்கப்பட்டுள்ளதும்; அவற்றில் மீதம் 5 பணிகள் முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதால் அவற்றிக்குண்டான பட்டியல் தொகை வழங்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பணிகளுக்குண்டான பட்டியல் தொகை நிலுவை ஏதும் இல்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும் Online ல் பில் பட்டியல் எந்த தேதியில் தயாரிக்கப்படுகிறதோ அந்த தேதியில் தான் காசோலையும் தயாரித்து வழங்கப்படுவதாகவும், மனுதாரர்தான் தாமதமாக இரண்டு காசோலைகளையும் பெற்று கொண்டார் என்பதையும் அறிய முடிகிறது. அதனால் மனுதாரருக்கு காசோலைகள் வழங்கப்பட்ட நடவடிக்கையில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்பது தெரிய வருகிறது. இதுதவிர காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு சொந்தமான யாத்திரிகர்கள் தங்கும் விடுதி மற்றும் உணவகம் வாடகை வசூலிக்கும் உரிமைக்கு நகராட்சி சட்டவிதிகளுக்குட்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று உயர்ந்தபட்ச ஏல தொகை ரூ.8,45,000/- கோரிய திரு.லோகேஷ் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மனுதாரர் திரு. K. சுடர்மணி கோரிய ஒப்பந்தப்புள்ளி ரூ 7,20,999/– விட உயர்ந்த பட்ச ஏலத்தொகையான ரூ 8,45,000/– கோரிய திரு. லோகேஷ் என்பவருக்கு குத்தகைவிடப்பட்டதன் மூலம் நகராட்சிக்கு கூடுதலாக ரூ.1,24,001/- தொகை வருவாய் கிடைத்துள்ளது. எனவே மேற்சொல்லப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் எவ்வித முறைகேடுகளோ, நகராட்சிக்கு வருவாய் இழப்போ ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடமிருந்து மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட 30.08.2022 நாளிட்ட அறிக்கையினை ஆய்வு செய்ததில்,

1) R.K.கெங்காதரன், 57, காமாட்சியம்மன் சன்னதி தெரு, என்ற விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடம் தொல்லியல் துறையின் அளவீடுகளை கடந்த இடமாக அமைகிறது என்றும் தகுதி அடிப்படையில் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) S. ராஜேஸ்வரி, 2A, காவலன் தெரு, காஞ்சிபுரம் என்ற விலாசத்தில் வணிக கட்டடம் கட்டியதற்காக முறையாக விண்ணப்பிக்கப்பட்டு அது பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கட்டடம் தொல்லியல் துறை வரையருத்துள்ள அளவீட்டிற்குள் வருகிறதா ? இல்லையா என்ற விளக்கம் இடம் பெறவில்லை.

3) P. ஆறுமுகம், A. ஆனந்தி, 131, 132B, செங்கழு நீரோடை வீதி, காஞ்சிபுரம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள வணிக கட்டிடத்திற்கு முறையாக விண்ணப்பிக்கப்பட்டு முறையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் விதிமீறல் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கட்டடம் தொல்லியல் துறையின் அளவீட்டிற்குள் வருகிறதா ? இல்லையா என்ற விளக்கம் இடம் பெறவில்லை. எனவே, மேற்சொல்லப்பட்ட இனம் 2 மற்றும் 3 கட்டிடங்கள் தொல்லியல் துறையால் குறிப்பிடப்பட்ட அளவீடுகளை கடந்த இடமா என்பதை ஏற்கனவே அமைக்கப்பட்ட குழுவினைக் கொண்டு 15 தினங்களுக்குள் மறுஆய்வு செய்து அதில் விதிமீறல்கள் கண்டறிப்பட்டால் அதில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளில்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

4) சா. பிரகாஷ், 92 காந்தி ரோடு, காஞ்சிபுரம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 216 (1) (2) ன் கீழ் 29.02.2021–ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் களஅலுவலர்களால் முறையாக கள ஆய்வு (Field inspection) மேற்கொள்ளப்பட்டிருந்தால் இவ்வாறு அனுமதியற்ற கட்டுமானம் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம் இச்செயலானது மாநகராட்சி அலுவலர்களின் மெத்தனப் போக்கையும் கடமை தவறிய செயலையும் காண்பிக்கிறது. மேலும், இக்கட்டடம் தொடர்பாக 29.02.2021–ம் நாளைய அறிவிப்பிற்கு பிறகு 29.08.2022–ல் நகர் ஊரமைச் சட்டம் 1971–ன் பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் சுமார் 18 மாதங்கள் கழித்த பின்னர் அடுத்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. எனவே, மெத்தனமாகவும் கடமை தவறியும் பொறுப்பற்றும் செயல்பட்ட சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.K.சுடர்மணி,
26 A, CSM தெரு, பிள்ளையார் பாளையம்,
காஞ்சிபுரம் - 631 501.

2) ஆணையாளர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
(முன்னர் காஞ்சிபுரம் பெருநகராட்சி),
காஞ்சிபுரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

06/10/22

சென்னை – 600 032